II. ADJOURNMENT MOTION *Re* situation created among teachers and Harijans by the attack on Thiruvalargal P. Venkatachalam and P. Rengasami by Thiru M. K. Palaniswami, candidate defeated in election to Avinashi Town Panchayat.

DEPUTY CHAIRMAN : I have received notice of a motion from Thiru S. Muthuswamy, M.L.C., for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely,

''அவிநாசி நகர பஞ்சாயத்து தேர்தலில் நின்று தோல்வியுற்ற திரு. எம். கே. பழநிசாமி என்பவர் 23/24-8-70 இரவு வள்ளுவர் காலனியில் வசித்துவரும் திரு. பி. வெங்கடாசலம் என்னும் அவிநாசிலிங்கம் பாளையத்தில் பணி புரியும் ஆசிரியரையும் அவர் சகோதரர் திரு. பி. ரங்கசாமி என்னும் ராக்கியாபாளையத்தில் பணி புரியும் ஆசிரியரையும் அவர்கள் வீட்டிற்குள் புகுந்து அவர்களையும் அவர்கள் வீட்டில் உள்ளவர் களையும் அடித்துத் துன்புறுத்தி யிருக்கிறார்கள். திரு. பழநிசாமியுடன் திரு. பழநியப்பன் என்பவரும் மற்றும் சிலரும் சேர்ந்துகொண்டு மேற் குறிப்பிட்டவர்களைத் தாக்கி, ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் திரு. எம். கே. பழநிசாமி அவர்களுக்கு வாக்களிக்கவில்லை என்றும் திட்டி யிருக்கிறார்கள். அவ்விரு சகோதரர்களும் தப்பிச் சென்று போலீசில் புகார் செய்தும் இதுவரையில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை. இதனால் ஆசிரியர் சமுதாயத்திலும், குறிப்பாக ஹரிஜன மக்கள் மத்தியிலும் பெரும் பதட்ட நிலைமையும் கொந்தளிப்பான சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.''

Now I want to know from the hon. Member how the matter falls within the scope of the rules relating to adjournment motions.

5-10 p.m. திரு. எஸ். முத்துசாமி : மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்தவுடன், அதையே கருத்தில் கொண்டு இரவில் ஆசிரியர்களின் வீடு புகுந்து தாக்கிய பின்னரும், ஹரிஜன காலனியில் புகுந்து தாக்கிய பின்னரும் கூட அவர்களுக்குப் பாதுகாப்பில்லை என்ற அளவுக்கு அங்கே இருக்கக் கூடிய காவல் துறையின் நடவடிக்கைகள் இருக்கின்ற காரணத் தால், ஆசிரியர்களை அவர்கள் மேற்கொண்டு தாக்கக்கூடிய சூழ் நிலையையும், அதைக் கண்டித்து ஆசிரியர்கள் அங்கே ஊர்வலங்கள் நடத்துகின்ற சூழ்நிலையையும், அவிநாசியில் உள்ள ஹரிஜன மக்கள் தங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற குரல் கொடுப்பதையும் அங்கே காண்கிறோம். இந்த நிலைமைகளையெல்லாம் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தாக்கியவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தால், ஆசிரியர்கள் மீண்டும் தங்களை அவர்கள் இரவில் வீடு புகுந்து தாக்கக்கூடும் என்று பயப்படும் உணர்வுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களை அடித்த நபர் அந்த ஊரில் செல்வாக்குள்ள பெரிய பணக்காரர். பல ஆட்களைத் தன் கீழ் வைத்துக் கொண்டிருப்பவர். எனவே மீண்டும் ஆசிரியர்கள் இந்த வகையான அச்சத்திற்கு உள்ளாயிருக்கிற காரணத்தால், மாண்பு

மிகு முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள் பாலும், ஆசிரியர்கள் சமுதாயத்திற்கும் நல்ல பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோருவதோடு இச்சம்பவம் குறித்து முழுமையாக விவாதிக்க இச்சபையின் நடவடிக்கைகளை இன்று ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : Now I want to know the view point of the Government in the matter.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் தந்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் அடிப்படையில் நடைபெற்றுவிட்ட சம்பவத்திற்காக காவல் துறையினர் எந்த வித நடவடிக்கையும் இதுவரையிலே மேற்கொள்ளவில்லை என்று எழுதித் தந்திருப்பதோடு அதன் அடிப்படையில் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் சென்னையிலே மன்ற நடவடிக்கைகளிலே கலந்து கொண்டிருக்கிற காரணத்தினால், காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் இருக்கும் என்று நான் கருதுகிறேன். கோவை மாவட்டம் அவிநாசியில் உள்ள வள்ளுவர் தெருவைச் சேர்ந்த பாலகிருஷ்ணனின் குமாரர் திரு. வெங்கடாசலம் 24-8-70 அன்று இரவு ஒரு மணிக்கு அவிநாசி போலீஸ் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார். இ.பி.கோ. 448, 341, 323-இன் படி ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு எண் 775/70. புகாரில் திருவாளர்கள் என். கே. பழநிசாமி, பழநியப்பன், கிட்டப்பன் ஆகியோர், திருமதி நாச்சம்மாள், திருமதி இராமகிருஷ்ணம்மாள், திருமதி இராமசாமி அம்மாள் ஆகியோரைத் தாக்கிக் காயப்படுத்தியதாகக் கூறப்பட்டது. திருமதி நாச்சம்மாள் திரு. வெங்கடாசலத்தின் மனைவியார். திருமதி இராமசாமி வெங்கடாசலத்தின் தாயாராகும். கிட்டப்பன் ஆகியோர் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள். தாக்கப்பட்டதனால் காயம்பட்டவர்களை மருத்துவ விடுதிக்குச் சிகிச்சைக்காக உடனடியாக அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்ற பழனியப்பன் 26-8-70 அன்று 12.30 மணிக்கு கைது செய்யப்பட்டு மேட்டுப்பாளையம் சப்-மாஜிஸ்ட்ரேட் முன்பு ஆஜர் செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கிறார். கிட்டப்பன் இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார். ரிமாண்டிலே வைக்கப்பட்டிருக்கிறார். என். கே. பழனிசாமி தலைமறைவாக இருக்கிறார். அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழக்கு புலன் விசாரணையில் இருக்கிறது. புகார் கொடுத்த வெங்கிடாசலம், அவருடைய சகோதரர், மற்றும் அவிநாசி ஆசிரியர்கள் சங்கத்தின் செயலாளர் ஆகியோரைக் கோவை ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி சந்தித்து விசாரணை நடந்து வருவதையும், போலீசார் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றியும் எடுத்துக் கூறி 26—8—1970 அன்று ஆசிரியர்கள் ஊர்வலம் நடத்தி அதன் பிறகு நடத்துவதாக இருந்த பொதுக் கூட்டம் தேவையில்லை என்பதையும் அந்த அதிகாரி எடுத்துக்கூறினார். மேலே குறிப்பிட்டவர்கள் அந்த அதிகாரி

கூறிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு கிளர்ச்சியை ஒத்தி வைத்துள்ளார்கள். நிலைமை தற்போது அமைதியாக உள்ளது. ஆசிரியர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கப்படும். இது ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடைபெற்ற சம்பவம், பொதுவாக ஆசிரியர்கள் அனைவருக்கும் ஏற்பட்டுவிட்ட ஒரு ஆபத்து என்கின்ற அளவில் யாரும் அஞ்சத் தேவையில்லை. ஆகவே இது அரசின் அன்றாட அலுவல்களில் ஒன்று என்ற அளவில் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையை எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை என்ற என்னுடைய கருத்தைக் கூறி அமர்கிறேன்.

DEPUTY CHAIRMAN : Now I have heard both sides. The subject-matter of the motion does not involve anything more than the ordinary administration of law and maintenance of order. Such matters do not form fit subjects for an adjournment motion. Therefore, I withhold consent to the raising of the matter.

III. Discussion on the Annual Financial Statement for 1970-71 and the Supplementary Financial Statement for 1969-70 of the Tamil Nadu Electricity Board.

DEPUTY CHAIRMAN : Now we resume discussion on the Electricity Board Budget.

5–20 p.m. THIRU V. ISVARMURTI : Mr. Deputy Chairman, Sir, it is always a welcome thing to speak on the Electricity Board Budget because electricity constitutes a very vital part in our State economy, but, unfortunately, this year we witnessed a tragedy in the death of three agriculturists, because electricity was the problem behind the tragedy. Though it is unfortunate, I have to pay my homage to those three martyrs and to all those who fought for the cause and courted arrest and vindicated their stand. While I point out this unfortunate tragedy, I would like to pay my tribute to the Hon. the Chief Minister for not standing on false prestige and for immediately conceding the cause of the agriculturists. So, the Electricity Board has lately become a subject of all sorts of controversies. The hon. Members pointed out in the current debate two very important aspects. They have pointed out that the cost of generating electricity has gone up, and several Members from the Opposition pointed out that the Electricity Board had now become a cesspool of party politics. The cost of electricity is a very important problem because on that depend all other forms of activities. It affects the consumers and it affects the new industrialists also. While I have no particular suggestion to make, I would like to bring to the attention of the Government that the cost of electricity is not in the hands of any Government or any party. It depends on economic factors, engineering factors. For instance, the Electricity Board budget reads like an Engineering Report. There cannot be any controversy about it. We have to spend for generating several megawatts of electricity which is beyond the scope of